பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கூடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 21 ஞாயிற்றுக்கிழமை (06-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 254

# தீர்வை நிறைவேற்ற முடியாவிடில் பொதுத் தேர்தல் நடத்தப்படும்!

## அதற்குத் தயார் என்கிறார் சந்திரிகா

கொழும்பு. ஒகஸ்ட். 6

அரசாங்கம் வெளியிட்டுள்ள யோசனையின் அடிப்படையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்காத பட்சத்தில் —

பொதுத் தேர்தலை நடத்தி மக்களின் ஆணையைப் பெறுவதற்குத் தாம் தயாராக உள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா கோடி காட்டியுள்ளார்.

''ராவய'' சிங்கள வார இதழ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சந்திரிகா அரசின் யோசனையை ஐக்கியதேசியக் கட்சி ஆதரிக்கும் என்பதற்கான சாதகமான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. ஆகையால் பிரஸ்தாப யோசனையின் அடிப்படையில் சட்ட நகல் ஒன்று தயாரிக்கப்பட்டாலும்கூட அதனை மூன்றில் இரண்டு வாக்குப் பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியாமல் போகும். அரசமைப்புச் சீர்திருத்தமும் சாத்தியமற்றதாகிவிடும்—

அத்தகைய நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்து மீண்டும் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு சந்திரிகா கருதியுள்ளார் —என்று ''ராவய'' தனது இவ்வாரத்துக்குரிய இதழில் தகவல் வெளியிட்டிருக்கிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளின் ஆதரவை பெறுவதில் ஜனாதிபதி நாட்டம்

கொழும்பு, ஒ. 6

எதிர்வரும் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் தீர்மானம் வரவுள்ளது. அப்போது அரசுக்கு தமிழ்க்கட்சிகளின் ஆதரவு மிகவும் தேவைப்படும்.

இவ்வாறு பி.பி.சி நேற்றுத் தெரிவித்தது.

நாடாளுமன்றத்தில் 9 உறுப்பினர்களைக் கொண்ட ஈ.பி.டி.பி.யின் ஆதரவைப் பெறுவதில் ஜனாதிபதி அக்கறை காட்டி வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு உணவு, மருந்துப் பொருள்களை அனுப்பாவிட்டால், நாடாளுமன்றத்தை பகிஷ்கரிக்கும் ஈ.பி.டி.பி. கட்சியின் முடிவில் எவ்வித மாற்றமும் இருக்காது என்று அக்கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா பி.பி.சிக்கு நேற்று அளித்த செவ்வி ஒன்றிலே கூறியிருக்கிறார். (இ 4)

## புலிகளின் பங்களிப்பு இல்லையேல் தீர்வுத்திட்டம் தோல்வி அடையும்

### பி. பி. சிக்கு வசந்தராஜா பேட்டி

கொழும்பு, ஒ. 6

தமிழீழ விடுதலைப் புலிகளின் பங்களிப்பு இல்லாவிடில் ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்டுள்ள தீர்வுத் திட்டம் தோல்வியையே தழுவும். அது மணமகனில்லாத திருமணம் போன்றதாகிவிடும்.

தீர்வுத் திட்டம் குறித்து பி.பி.சிக்கு கருத்து வெளியிடுகையில், ரூபவாஹினியின் முன்னாள் தலைவர் வசந்தராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத்தனை முன்னேற்றமான அடிப்படையில் தீர்வுத்திட்டம் அமைந்த பின்னர் விடுதலைப் புலிகளின்றி நடைமுறைப்படுத்த முற்படின் என்றுமே போர் ஓயாது. அவர்கள் இன்றி தீர்வுத் திட்டத்தைச் செயற்படுத்தலாம் என அரசு கருதுவது தவறானதாகும்.

பேச்சுவார்த்தைகள் நடைபெறுகையில் தீர்வுத்திட்டம் வெளியிடப்படாதது புதிராக உள்ளது.

எனது சொந்த அனுபவத்தின் படி, இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் முன்னர் அரசிடம் இருக்கவில்லை. இது கடந்த சில வாரங்களிலே ஏற்பட்ட மாற்றமே என்பதை நான் உறுதியாகக் கூறுவேன்.

அந் நாட்களில் அரச வட்டாரங்களில் நிலவிய கருத்தை நான் நன்கு அறிவேன். இதிலிருந்து அரசில் சில மாற்றங்கள் ஏற்படுவது தென்படுகிறது.

பல எதிர்ப்புகளின் மத்தியிலும் இம்மாற்றம் வரவேற்கத் தக்கது

எவ்வாறாயினும் விடுதலைப் புலிகளை ஒதுக்கி தமிழ் மக்களைக் கவர முயல்வது தோல்வி அடையும் திட்டமாகும்.

இப்படி அவர் கூறினார்.

## வலி. வடக்கு மோதலில் 6 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒ. 6

நேற்று முன்தினம் வலிகாமம் வடக்குப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் முன்னேற்ற முயற்சி முறியடிக்கப்பட்ட தாக்குதலில் 6 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

மேஜர் இளவழகன் அல்லது றஞ்சித் (தர்மலிங்கம் மகாலிங்கம் — வசாவிளான் தம்போதைய வதிவிடம் உரும்பிராய் தெற்கு), லெப்டினன்ட் கோகிலா (சின்னத்தம்பி இராசரத்தினம் — அல்வாய் வடக்கு). லெப்ரினன்ட் வசுமதி (பிள்ளைபனார் வசந்தகுமாரி—பூநகரி), 2 ஆம் லெப்டினன்ட் சுசீலா (சர்மிலா ஐயம்பிள்ளை—புத்தூர் நவக்கிரி), வீரவேங்கை சுமங்கலி (ஜேசு விஜயகுமாரி— மரசு மோட்டை— பழையகாமம்)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தோர் எண்ணிக்கை 6 ஆக உயர்வு

கொழும்பு, ஒ. 6

வலிகாமம் வடக்கில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற சண்டையில் கொல்லப்பட்ட படையினரின் எண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தாளையடி பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்

### இளம் பெண் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒ. 6

நேற்றுக் காலை வெற்றிலைக்கேணி இராணுவ முகாமில் இருந்து தாளையடி, வத்தராயன் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

வத்தராயன் பகுதியில் வீழ்ந்து வெடித்துச் சிதறிய ஷெல்லினால் அதே இடத்தைச் சேர்ந்த திருமதி இராமச்சந்திரன் வனஜா (35 வயது) என்ற மூன்று பிள்ளைகளின் தாயார் படுகாயமடைந்து மிகவும் மோசமான நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது வீட்டுக் குசினியில் தேனீர் வைத்துக்கொண்டிருந்த வேளை குசினியின் யன்னல் பக்கமாக வந்த ஷெல் துண்டு ஒன்று இவரை முதுகுப் பக்கமாகத் தாக்கியது

(இ-117-15-13)

## ஹபரணவில் வினாத்தாள்

வடமராட்சி, ஒ. 6

ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களின் மற்றொரு தொகுதி இன்று ஞாயிறு ஹபரண கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்படவுள்ளது. கடந்த தடவை 6 நாட்களுக்குரிய வினாத்தாள்களே எடுத்துவரப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-137)

## மேலும் இரு முகாம்கள் திருமலையில் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், ஒ. 6

திருகோணமலை மூதூரில் மேலும் இரு இராணுவ முகாம்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மூடியுள்ளனர்.

மூதூரில் உள்ள நாவலடிச் சந்தி முகாமும், ஈச்சிலம்பற்றை இராணுவ முகாமுமே தற்போது மூடப்பட்டுள்ளன.

சென்ற வியாழக்கிழமை இவ்விரு இராணுவ முகாம்களும் மூடப்பட்டன. இதற்கு முன்னதாக 5 இராணுவ முகாம்கள் மூதூரில் மூடப்பட்டிருந்தன. (இ 4,

வெளியீட்டு விழா:

நிதர்சனமும், மட்டு–அம்பாறை சிறப்புப் படையணியும் இணைந்து தயாரித்து வழங்கும்

சி. சேரனின் "உறங்காத கண்மணிகள்" (முழுநீளத் திரைப்படம்)

இடம்: ஸ்ரீதர் திரை அரங்கு, யாழ்ப்பாணம். காலம்: 07-08-1995 நேரம்: மாலை 4-30 மணி

[9/1994]

# வேரும் விழுதுகளும்

ஓர் கல்வியியற் கண்காட்சி

ஆரம்பம்:- **10-08-1995**

இடம்:- நுணாவில் கண்ணகை அம்மன் கோயிலடி

— செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்.

(37883)



# தேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து ஆசிரியர்கள் தேவை. கோப்பாய் உதவி அரசாங்க பிரிவைச் சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்கவும்

வட இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி
14, சென்பீற்றர்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி-2001)



## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## மருதனார்மடக் கோட்டம்
# பொதுச்சபைக் கூட்டம்

இடம்:- புதிய விஞ்ஞானக் கல்விக்கழகம் எழிலகம் முன்பாக - யாழ்ப்பாணம்.

காலம்:- 07-08-95 திங்கள் காலை 10.30 மணி

விடயம்:- போர்க்கால சூழலால் பாதிக்கப்பட்ட இடம் பெயர்ந்தோர்களுக்கான கலந்துரையாடல்.

குறிப்பு:- நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது நேரத்துடன் சமூகம் தரவும்.

செயலாளர்

(சி/2003)



# இதய அஞ்சலி
## கணபதிப்பிள்ளை ஜெயகுணா

எமது வித்தியாலய ஆசிரியை
செல்வி க. வையந்திமாலாவின்

அன்புச் சகோதரர் கணபதிப்பிள்ளை ஜெயகுணாவின் மறைவையொட்டி, எமது இதயபூர்வமான அஞ்சலியை சமர்ப்பிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து, அவரது குடும்பத்தவர் துயரில் நாமும் பங்கேற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/ கொட்டடி, நமசிவாய வித்தியாலயம். (37887)



# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 26 — 09 — 1947



உதிர்வு: 06 — 08 — 1988

## திருமதி லீலாவதி குகபாலன்
[ஆசிரியை - உசன் இராமநாதன் ம/வி]

இலட்சியத்தின் இதய நாடியாய்
பாசத்தின் விடிவிற்காய்
பார்புகழ வாழ்ந்த உம் ஆத்மா
என்றென்றும் எம் துணையாய் இருக்க
வேண்டி நிற்கும்.

கணவன், அப்பா, சகோதரர்,
பெறாமக்கள், மருமக்கள்,
ஆசிரிய, மாணவர்கள்

36, சட்டநாதர் றோட்,
நல்லூர், [37882]


## தமிழர்களின் பிரதேசத்தில் இருந்து
# அம்பாறையை பிரிக்கும் கூட்டணியின் யோசனைக்கு நெடுமாறன் கண்டனம்
## சிவசிதம்பரத்தைச் சாடி சென்னையில் அறிக்கை

கொழும்பு, ஓக. 6

இலங்கையில் தமிழர்களின் பிரதேசத்தில் இருந்து, அம்பாறைத் தேர்தல் தொகுதியை முற்றாகப் பிரிக்கும் யோசனைக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் இணங்கியிருப்பது தனக்கு மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருப்பதாக, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. பி. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக சென்னையில் அவர் ஓர் அறிக்கையையும் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முற்றிலும் தமிழருக்குச் சொந்தமானதும், மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்ததுமான அம்பாறையில், கடந்த 40 ஆண்டு காலமாக சிங்களவர் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறு 40 ஆண்டுகளாக மட்டும் சிங்களவர் இங்கு வசித்து வருவதற்காக அதை சிங்களவருக்கே விட்டுக் கொடுப்பது நியாயம் என்றால்— அதே நியாயத்தை மலையகத் தமிழருக்கும் வழங்க வேண்டும்.

150 ஆண்டுகளுக்கும் மேலாக மலையகத் தமிழர் குடியேறி, பெரும்பான்மை எண்ணிக்கையில் நிலை பெற்றுள்ள நுவரெலியா மாவட்டத்தைத் தமிழீழத்துடன் இணைக்க வேண்டும் என சிவசிதம்பரம் வற்புறுத்தி இருப்பாரானால் அதற்காக அவரைப் பாராட்டலாம்.

ஆனால் அவர் அவ்வாறு எதுவும் செய்யவில்லை.

சிங்களவர் பற்றிக் கவலை கொண்ட அளவு, அவர் மலையகத் தமிழர் பற்றிக் கவலைப்படவில்லை. இது கண்டு நான் வருந்துகிறேன்.

தமிழருக்குச் சொந்தமான புத்தளம் சிங்களவரிடம் பறி போய் விட்டது.

தமிழர்களின் தெய்வமான கதிர்காமக் கந்தனின் ஆலயம் அமைந்துள்ள தென் மாகாணத்தை, தமிழர் உரிமை கொண்டாட, சிங்களவர் அனுமதிப்பார்களா?

கணிசமான முஸ்லிம்கள் வாழும், இந்தியாவின் அஸாமை, முஸ்லிம்கள் உரிமை கொண்டாடுவதை காந்தி, நேரு, பட்டேல் போன்றோர் கடுமையாக எதிர்த்தார்கள்.

வங்க முஸ்லிம்கள் பல ஆண்டுகளாக நிலை பெற்று விட்டார்கள் என்பதற்காக, அஸாமை அவர்களிடம் இழக்க அவர்கள் சம்மதிக்கவில்லை. இதை சிவசிதம்பரம் அவர்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

இலங்கையின் தமிழர் பிரதேசம் பல்லாயிரக் கணக்கான மக்களும், போராளிகளும் சிந்திய இரத்தத்தால் சிவந்திருக்கிறது: இன்னமும் சிவந்து வருகிறது.

இந்த உன்னத உயிர்த் தியாகங்களை மறந்து, அரசியல் பேரங்களில் யார் ஈடுபட்டாலும் அவர்களை மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

[ஒ-எ]

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 6

கொக்குவில் மேற்கு, ஸ்ரீ சித்தி விநாயகர் [ஐயனார்] ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

அதன் பின் சித்திரத் தேரை நிர்மாணித்த திருநெல்வேலி, ஆறுமுகம் சிற்பாலய, ஸ்தபதி சிற்பச்சக்கரவர்த்தி ஆறுமுகம் ஜீவரட்ணமும், அவரது குழுவினரும் பாராட்டிக் கௌரவிக்கப்படுவர். [எ]

## தேசிய கல்வி நிறுவன ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஓக. 6

தேசிய கல்வி நிறுவன கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி நிலைய 1 ஆம் வருட டிப்ளோமா மாணவர்களுக்கும் இந்து மகளிர் கல்லூரி நிலைய 2 ஆம் வருட டிப்ளோமா மாணவர்களுக்கும், விரிவுரையாளர்களுக்குமான ஒன்று கூடல் இன்று காலை 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி நிலையத்தில் நடைபெறும்.

அத்துடன் முதலாம் வருட டிப்ளோமா நெறியை முடித்தவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். (இ)

## கதம்ப மாலை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6

நோயாளர் நலன்புரி சங்கத்தால் இன்று சனிக்கிழமை அரியாலை காசிப்பிள்ளை கலை அரங்கில் நடத்தப்படவிருந்த கதம்ப மாலை நிகழ்ச்சி போர்க்கால சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. [இ]

## சிவப்பிரகாச வித்தியாலய மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 6

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களையும்—

ஆண்டு 9 இல் கல்வி பயிலும் மாணவர்களையும்—

தொழிநுட்பப் பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களையும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலைக்கு தவறாது சமூகமளிக்குமாறு அதிபரினால் கோரப்பட்டுள்ளது. (இ)

# நெடுமாறன் அறிக்கைக்கு சிவசிதம்பரம் பதில் கடிதம்

கொழும்பு, ஓக. 6

அம்பாறைத் தொகுதியில் இப்போது 97 சதவீதமானோர் சிங்களவர்கள். அதனால் அதனைக் கிழக்கு மாகாணத்துடன் தொடர்ந்தும் இருக்கவிட்டால் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் வெகுவாகப் பாதிக்கப்படும். அதனாலேயே கூட்டணி அத்தொகுதியை பிரிப்பதற்கு யோசனை வழங்கியது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன் விடுத்த அறிக்கைக்குப் பதிலளிக்கும் முகமாக அவருக்கு எழுதிய கடிதத்திலேயே சிவசிதம்பரம் இவ்வாறு கூறியுள்ளார்.

அம்பாறைத் தொகுதியை கைவிட்டு விடுவதென்பது எனது தனிப்பட்ட முடிவல்ல. இது அமிர்தலிங்கம் காலத்திலிருந்தே சிந்திக்கப்பட்டு வந்தது. மங்கள முனசிங்கா தலைமையிலான தெரிவுக் குழுவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த யோசனையில் இது விடயம் முக்கிய இடம் பெற்றிருந்தது. —

இப்போதுள்ள நிலையை முன்னிட்டே கூட்டணி இந்த முடிவுக்கு வந்தது. தற்போதைய நாடாளுமன்ற விசேட குழுவுக்கும் கூட்டணி இந்த யோசனையைத் தெரிவித்திருந்தது.— என்றும் மு. சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார். (அ)

## விசேட அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 6

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அனைத்து அரச செயலகங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அரச - தனியார் வைத்தியசாலைகள், வங்கிகள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள், மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், ஆகியவற்றைச் சேர்ந்த சகல தரங்களையும் சார்ந்த பணியாளர்கள், பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நாளை 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இதில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# ரூபவாகினி புளுகுப்பெட்டி: கொழும்பில் வர்ணனை

கொழும்பு, ஓக. 6

கொழும்பில் வாழும் மக்கள், குறிப்பாக தமிழர்கள் ஸ்ரீலங்கா ரூபவாஹினிக்கு ''புளுகுப் பெட்டி'' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் போது வெளியிடப்பட்ட வானொலி தொலைக்காட்சி செய்திகளை ''புளுகுமூட்டைகள்'' என அவர்கள் வருணிக்கிறார்கள்.

இராணுவ நடவடிக்கையின் போது வலிகாமம் பற்றி மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் வெளியிடப்பட்டன.

இதனால் தமது வீட்டு ஆட்களின் நிலைமையை யோசித்து கொழும்பில் இருந்த வடபுல மக்கள் திகிலேமைப் பிடித்தவர்களாக இருந்தார்கள் என அறிய வருகின்றது. சிலருக்கு இரத்த அழுத்த நோய் கூட ஏற்பட்டது.

ஒரு வாரத்தின் பின்பு, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்தவர்கள் மூலம் உண்மைச் செய்திகளைக் கேட்டறிந்த பின்பு தான் அவர்கள் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். (ஓ-க-154)

# வடக்கு-கிழக்கு ராணுவ முகாம்களை எல்லைப் புறங்களுக்கு அகற்றுக!

## வாசுதேவ அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, ஓக. 6

வடக்கு,—கிழக்குமாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும்.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார அரசாங்கத்துக்கு இவ்வாறு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இராணுவ முகாம்களை மாகாண எல்லைகளில் அமைக்கவேண்டும். இதனால் விடுதலைப் புலிகளுடன் மோதலைத் தவிர்க்க முடியும் அத்துடன் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களையும் தவிர்க்கமுடியும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

(க-154)

## பருத்தித்துறைக் கடலில் ஹெலியில் இருந்து வேட்டு

வடமராட்சி, ஓக. 6

பருத்தித்துறை முனை கடல் பகுதியில் மீனவர்கள் மீதும் அவர்களின் கட்டுமரங்கள் மீதும் ஹெலி ஒன்று தாக்குதல்களை நடத்தியது.

நேற்று முன்தினம் காலை 8-45மணியளவில் கடல் பகுதிக்கு மேலாக காங்கேசன் நோக்கிச் சென்ற ஹெலியே இத்தாக்குதல்களை நடத்தியது.

இத்தாக்குதல்களினால் மீனவர்களுக்கோ, கட்டுமரங்களுக்கோ எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இதேவேளை வடமராட்சி கடற்பரப்புக்கு மேலாக ஹெலி, விமானங்கள் நேற்று முன்தினம் அடிக்கடி போவதும் வருவதுமாக இருந்தன.

(ஒ-173)

## தொண்டாவின் கடிதம் இப்போது சர்ச்சையில்

### கிடைக்கவில்லை என்கிறார் சந்திரிகா

வடக்கு-கிழக்குப் பகுதியில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டுமாயின், விடுதலைப் புலிகளிடம் 5வருடங்களுக்கு ஆட்சிப் பொறுப்பை வழங்க வேண்டும் என்று கூறி—

அமைச்சர் தொண்டமான் எழுதியதாகக் கூறப்படும் கடிதம் தமக்குக் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி நேற்று முன்தினம் மறுத்துரைத்தார்.

ஆயினும் பி. பி. ஸி, ''சந்தேசிய'' சேவை செய்தியாளர் அமைச்சர் தொண்டமானிடம் ஜனாதிபதியின் மறுப்புக் குறித்து நேற்று முன்தினம் இரவு பிரஸ்தாபித்த போது தொண்டமான் பின்வருமாறு கூறினார்;

நான் எனது கடிதத்தை இம்மாதம் 2ஆம் திகதி இரவு ஜனாதிபதி சந்திரிகாவிடமே நேரில் கையளித்தேன்—என்றார்.

[அ-6]

## ராணுவ நடவடிக்கை மூலம் சமாதானம் வர முடியாது

### றொனி டிமெல் கூறுகிறார்

வடக்கு—கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியாது.

முன்னாள் நிதி அமைச்சரும் தற்போது மாத்தறை மாவட்ட ஐ. தே. கட்சி எம். பி.யுமான றொனி டிமெல் தெரிவித்துள்ளார்.

வடக்கு—கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத்தீர்வு காணப்பட வேண்டும்.

சமரச முயற்சிகளினால் மட்டுமே நிரந்தர அமைதியைக் காணமுடியும்.

நாட்டில் வாழும் சகல இனமக்களும் சம அந்தஸ்துடன் வாழக்கூடிய சூழ்நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-எ)

## ஹங்கேரி இழுவை டிரக் சம்பவம்

# உயிருடன் மீட்கப்பட்ட 17 பேர் இன்று கொழும்பு வருகை

ஹங்கேரியில் கடந்த மாதம் இடம்பெற்ற இழுவை டிரக் வண்டிச் சம்பவத்தில் உயிருடன் மீட்கப்பட்ட 17 இலங்கையர்கள் இன்று ஞாயிறு இலங்கை திரும்புகின்றனர்.

ஹங்கேரியில் இருந்து இழுவை டிரக் வண்டி மூலம் சட்டவிரோதமாக ஜேர்மனுக்குள் நுழைய சென்றுகொண்டிருந்தவேளை இவர்கள் ஹங்கேரியின் மேற்கு நகரமான கியோரில் வைத்து பிடிபட்டனர்.

உயிர் தப்பிய 17 இலங்கையரும் ஹங்கேரி அரசிடம் புகலிடம் கோரியிருந்தபோதிலும் அரசு புகலிடம் அளிக்காது, அவர்கள் பயணத்தை ஆரம்பித்த ருமேனியாவுக்கும் அனுப்பி வையாது இலங்கைக்கே அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஏற்பாட்டின் படி இவர்கள் ஞாயிறு அதிகாலை 1. 30 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையம் வரவிருப்பதாக இலங்கை வெளிநாட்டு அமைச்சுக்கு ஹங்கேரி அதிகாரிகள் தகவல் அனுப்பியுள்ளனர்.

இச்சம்பவத்தில் 18 இலங்கையர்கள் உயிரிழந்தது தெரிந்ததே.

[இ-4]

# நவாலி தேவாலயம் மீது பீரங்கிக் குண்டே விழுந்தது

## ஜனாதிபதி சொல்கிறார் இப்படி!

கொழும்பு, ஓக. 6

நவாலி தேவாலய வளவிற்குள் பீரங்கிக் குண்டுகள் அல்லது வேறு ஏதேனும் குண்டுகளே விழுந்துள்ளன. இதனால் சில ஓடுகள் சேதமடைந்துள்ளன.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா நவாலி சம்பவம் குறித்து கத்தோலிக்கத் திருச்சபை (The Church) இது வரை அறிக்கை எதனையும் வெளியிடவில்லை. யாழ். ஆயரிடமிருந்து மேலும் பல விவரங்களை நாம் எதிர்பார்த்துள்ளோம் — என்று அவர் கூறினார்.

கொழும்பு ஆதி மேற்றிராணியாரே இது குறித்து தமக்கு எழுத்து மூலம் அறிவித்திருப்பதாக ஜனாதிபதி சொன்னார்.

நாவாலித் தேவாலயம் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகவில்லை என்று அவர் அடித்துச் சொன்னார்.

அத்தோடு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நவாலித் தேவாலயம் சம்பந்தமாக அறிக்கை விடுத்ததை கண்டிக்கும் தொனியில் அவர் கருத்து வெளியிட்டார்.

(அ-4-6)

## மாதாந்த உதவிப் பணம்

யாழ்ப்பாணம், ஓக. 6

புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு, நெடுந்தீவு, மண்டைதீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு பெறுபவர்களும், புற்றுநோய், தொழுநோய் என்பவற்றுக்கான—

தமது ஆனிமாதக் கொடுப்பனவை யாழ். மத்திய தபாலகத்தில் இயங்கும் இப் பகுதித் தபாலகங்களில் பெற்றுக் கொள்ளும்படியும்—

இக் கொடுப்பனவுகளைப் பெறும் கொற்பலி முகாமைச் சேர்ந்தோர், அதனை விடத்தற்பளை உபதபாலகத்தில் பெற்றுக் கொள்ளும்படியும் வேலணைப் பிரதேச செயலர் அறிவிக்கின்றார்.

[எ]

## புலிகளின் குரல் வானொலியில்

**06 – 08 – 1995**

**ஞாயிறு இரவு**

★ 8-02 — இசையரங்கம் செல்வி. ச. முத்துக்குமாருவின் வீணைக்கச்சேரி.

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — தொடர்நாடகம் — பொன். கணேசமூர்த்தி எழுதிய ''இலங்கைமணி'' 5 ஆம் அங்கம்.

**07 – 08 – 1995**

**திங்கள் காலை**

★ 7-02—மாவீர வணக்கம்

★ 7-15— நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகை செய்திகள்

★ 7-45— நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**ஞாயிறு மாலை**

★ 5-01—சிந்தனைச்சிதறல்

★ 5-02 — எழுச்சிகீதம்

★ 5-10 — புதியவை

★ 5-15 — மழலைகளுக்காக

★ 5-30 — கதம்பம்

★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்

★ 6-02 —உங்கள் தெரிவு

★ 6-10 — செய்திகள்

★ 6-15 —உங்கள் தெரிவு நிகழ்ச்சியின்தொடர்ச்சி

# அரிசி, பாண்: எது முக்கியம்? முடிவு விரைவில் தெரியும்

## மாவின் மானியம் ரத்தாகலாம்

கொழும்பு, ஓக. 6

''அரிசியா பாணா'' என்ற விஷயத்தை ஒட்டி? அரசாங்கம் விரைவில் ஒரு முக்கிய தீர்மானத்தை எடுக்க இருக்கின்றது என அறிய வருகின்றது.

கோதுமை மாவுக்கான மானியத்தை நிறுத்தி நெல் விவசாயிகளின் சுமையைக் குறைப்பதா அல்லது பாணை ரூபா 3 50இக்குத்தொடர்ந்து வழங்குவதா என்பதை ஒட்டி அரசாங்கம் சங்கட நிலையில் உள்ளது.

நெல் சந்தைப் படுத்தும் சபை விளம்பரங்கள் பல வற்றை வெளியிட்டுள்ள போதிலும் 85 இலட்சம் புசல் நெல் தானிய சாலைகளிலும் 23ஆயிரம் தொன் அரிசி தானியக் களஞ்சியங்களிலும் இருக்கின்றன. ஒரு கொத்து நெல் 4ரூபா என்று விலை குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதற்கான தேவை அதிகரிக்கவில்லை.

இந்த நிலைமையில், குறைவான அரிசித் தேவைக்குக் காரணமான மாமீதான மானியத்தை நிறுத்த வேண்டும் என்று விவசாய அமைச்சர் டி. எம். ஜயரத்ன கோரியுள்ளார்.

சற்றுக் காலத்துக்கு முன் தான் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ள போதிலும் இது பற்றி இன்னும் ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் ஜயரத்ன தெரிவித்தார்.

மானியத்தை நிறுத்துவதால் அரிசித் தேவை அதிகரிக்கும் எனவும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் அது உதவும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

தேர்தல் வாக்குறுதி ஒன்றை நிறைவேற்று முகமாக அரசாங்கம் பாண் மானியத்தை வழங்கியது. இதனால் திறைசேரிக்கு வருடாந்தம் 600கோடி ரூபாவுக்கு மேல் செலவாகின்றது.

(க)

## இடம் பெயர்ந்த முன்பள்ளி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 6

''முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளில் தற்காலிகமாக இருக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்களைச் சந்திக்கும் முகமாக—

தென்மராட்சிப் பகுதியில் இடம் பெயர்ந்திருக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்களை நாளை திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு சாவகச்சேரி அமிர்தாம்பிகை அரசினர் பாடசாலையில் கூடுமாறும்—

வலிகாமம் பகுதியில் இடம் பெயர்ந்திருக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்களை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு கந்தர்மடம் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தில் கூடுமாறும் மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார்.

[ஒ]

## நல்லூர் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 6

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் ஆறாம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணி மண்டப முன்றலில்

மாலை 6 மணி முதல் 7 மணி வரை சௌந்தரவல்லி-தர்மலிங்கம் பாட்டு

7 மணி முதல் 8 – 30 மணி வரை திரு. வி. கே. நடராஜா பாட்டு

★ நல்லை ஆதீன கலா மண்டபத்தில்

பி. ப. 3 மணிக்கு சிவத் தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப் பேருரை.

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில்

மாலை 5 – 30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மாவின் ''விஷ்ணு பாகவதம்'' தொடர் இசைப் பேருரையில் ''ஜடபரதர்''.

[ஒ-30-111]

## இடி வீழ்ந்து நெசவு நிலைய கட்டடம் சேதம்

தென்மராட்சி, ஓக. 6

மழை பெய்துகொண்டிருக்கும்போது இடி வீழ்ந்ததில் நெசவு நிலையக் கட்டடக் கூரை சேதமடைந்த சம்பவம் கடந்த வார இறுதியில் வடமராட்சி கிழக்கு வத்திராயனில் இடம்பெற்றது.

இரவு வேளையில் இடி வீழ்ந்ததால் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.

(ஒ-117

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

### நாசகாரரை அழித்திடு நல்லூரனே!

தேடு கல்வி வழங்கும் பள்ளியைத்
தீயினுக்கிரை யாக்கி மகிழ்பவர்;
வீடு புகுந்து உள்ள வளங்களை
உருவியேகளவாக எடுப்பவர்:
பாடு பார்த்துத் துயருறும் மக்களைப்
பாழ்படுத்தியே பழிபல புரிபவர்
நாடு முற்றிலும் உள்ளனர் வேலினால்
நாசகாரரை அழித்திடு நல்லூரனே!

—நா. க. சண்முகநாதபிள்ளை

### விடுதலைக்கு வழி செய்!

முருகா என்று பலர் கதறியழுதார்
உன் துணை கிடைக்குமுன் உடல்-
துண்டாகிப் போனார்.
அரக்கனின் குண்டுகள் அடுத்தடுத்து மண்ணிலே
துடிதுடித்திறக்கும் காட்சிகள் கண்ணிலே
வினையறுக்கும் வேலவா விரைந்தோடி வாராயோ!
சூரனை அழித்த கந்தனே நீ

அலங்கார உற்சவம் காண்கிறாய்
விடுதலை பார்த்து நாம்
விழிதிறந்து நிற்கின்றோம்
வழிசெய், விரைவில் வேலவா!

-தயா லோகதாசன்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஹலைன் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் தடுப்பூசி போடப்பட்டு ஒரு மாதம் வளர்க்கப்பட்டவை, விற்பனைக்குள் தொடர்பு இல. 9 ந் வீதி, யாழ்ப்பாணம். (37981)

காலை, மாலை இரண்டு போத்தல் பால் எடுக்கக்கூடிய ஐந்து மாத சினையுள்ள இரு யமுனாபாரி ஆடுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு க. மகாலிங்கம், அங்கணப்பாய், இணுவில் கிழக்கு. (37874)

நல்ல நிலையில் பாவனையில் இருக்கும் A'40 வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. மு. ஆ. கோபாலசாமி, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்) [37864]

ஒரு சோடி வெள்ளை உழவு மாடுகளும் C. D. 50 ஹெண்டா மோட்டார் சைக்கிளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. வரதராஜா ராஜ்கோபால்ஸ் களஞ்சியம் (உப தபாற்கந்தோர் முன்பாக) மட்டுவில் தெற்கு. (37862)

வாய்வுக் குழப்பமா? பசி இன்மையா? அருந்துங்கள் "ஜீவா" உடன் இரசம் ["JEEVA" Instant Rasam] விநியோகிப்போர்:முத்தையா நிறுவனம், கச்சேரியடி, யாழ்ப்பாணம். (காட்டுக் கந்தோர் ஒழுங்கை முன்னால்] [37755]

### தேவை

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹோர்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-1967)

### மணமகள் தேவை

பிரான்ஸின் பத்து வருடங்களுக்கு மேலாக வசிக்கும் 33 வயது Non R. C. தம்பிக்கு, அண்ணன் மணமகள் தேடுகிறார். தொடர்பு: இல. 819, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [37870]

### மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற 35வயது, நியூஸிலாந்து டொக்டருக்கும், 38 வயது கனடாவால் வந்த வருக்கும், 38 வயது ஜேர்மனி வாசிக்கும், பிரான்ஸிலுள்ள கத்தோலிக்க 34, 39 வயதுள்ளவருக்கும் மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (37856)

### மணமக்கள் தேவை

37, 36 இந்து பட்டதாரி ஆசிரியருக்கும், சைவபோசன 30, 32 வயது அரசாங்க லிகிதருக்கும், Non R. C. 28 வயது ஆசிரியைக்கும், அவர் சகோதரனுக்கும், 30, 32 வயது பட்டதாரி ஆசிரியைக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (37880)

### SPECIAL ANTENNA

To view Rupavahini Madras, Programmes Fixing Special T. V. Antenna, Repairing Antennas, Radios T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road [Ariyakulam Junction], Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. [சி-1976]

### புலமைப்பரிசில் பரீட்சை

ஆண்டு 5, 4 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 95 06-08-95 ஞாயிறு காலை 8. 30 மணிக்கு நடைபெறும். புலமைப்பரிசில் மாதிரி வகுப்புக்களும் மற்றைய வகுப்புக்களும் நடைபெறுகின்றன. வினாத்தாள் தேவையானோர், தொடர்பு கொள்ளவும், புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்- [37879]

### மகாதேவா ஜோதிடம்

ஜோதிட ஆலோசனைகளுக்கு ஜோதிடரைத் தினசரி காலை 8-00 மணி முதல் பிற்பகல் 9-00 மணி வரை. இல. 140, செல்லர் வீதி, (கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகில்) என்ற முகவரியில் சந்திக்கலாம். (37873)

### மிருதங்கம்

ஒரு 24 அங்குல வெறும் கொட்டு அந்த முழுவேலையும் செய்ய 1000/- மட்டும் நல்ல நாதத்துடன் குறித்த தவணையில் யாவரும் செய்து பெற்றுக் கொள்ளலாம். கோவிந்தபிள்ளை விஜயகுமார், இல: 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். [37843]

### இடமாற்றம

சுன்னாகத்தில் இயங்கிவந்த சஜன்ஸ் வாச் வேக்ஸ் ஸ்தாபனம் திருத்திய மணிக்கூடுகள் கொடுப்பதற்காக பொற்பதி றோட், கோண்டாவில் கிழக்கு, மகேந்திரன் கடை பக்கத்து வீட்டிற்கு மாற்றப்பட்டுள்ளது. தங்களுக்கும் கொடுக்கப்பட்ட சிட்டையுடன் வந்து பெற்றுக்கொள்ளவும். (37857)

## G· C· C.
## வைத்திய நிபுணர்கள்
## ஆலோசனை நிலையம்


கண், மூக்கு, தொண்டை (E. N. T,), முறிவு, மகப்பேறு, சத்திரசிகிச்சை, சிறுபிள்ளைக்குரிய வைத்தியம், சரும நோய்கள், பல் கட்டுதல், பற்சிகிச்சையும் வைத்திய நிபுணர்களினால் ஆலோசனையும், வைத்தியமும் வழங்கப்பட்டு வருகின்றன.

– நிர்வாகி

யாழ். அரசாங்க வைத்திய சாலை.
((பழைய O. P. D. முன்பாக)

514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (8627)

## ஐந்தாம் ஆண்டு
## நினைவலைகள்



**வைத்திலிங்கம் சிங்கவேலு**
(மருதனார் மடம் எம்பொருள் நிலைய உரிமையாளர்)

தோற்றம்: 05 – 11 – 1917
மறைவு: 18 – 07 – 1990

திதி: 06 - 08 – 1995

ஆண்டுகள் ஐந்து சென்றாலும் அப்பாவே
அகமெல்லாம் வெந்து வெதும்புதே
நீண்ட வாழ்வது நீளாமல் போனதால்
நிம்மதியிழந்து தவிக்கின்றோம் நீங்கள்
மாண்டு போனதை உங்கள் மாண்புகளை
மறந்து வாழ எங்களால் முடியாது
உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

238 கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (37878)

## கலந்துரையாடல்

வெகுஜன அமைப்புக்களால் முன்னெடுக்கப்படவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்பில், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை ஏற்பாடு செய்துள்ள கலந்துரையாடலில், தவறாது பங்கு பற்றி ஒத்துழைக்குமாறு அங்கத்துவ சங்கங்கள் கொத்தணிகளின் தலைவர், பொது முகாமையாளர், செயலாளர் ஆகியோரை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.


காலம்: 07 - 08 - 95 திங்கள் மு.ப 10-00 மணி

இடம்: யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபம்.

தலைவர்,
வட மாகாண தெங்கு பனம் பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
யாழ்ப்பாணம்.
[சி-2002]

## 31-வது நிறைவு நாளின்று

எமது நினைவூறல்களில் நீங்கள்தான் உண்டு.



**அமரர் இ. கந்தையா**

அன்னைக்குள் உருவமாய்: 29 – 08 – 1926
விண்ணுக்குள் அருவமாய்: 07 – 07 – 1995

எப்படி நாம் மறப்போம்
மறக்கத்தான் முடிந்திடுமோ
எம்பதி நீங்க விண்றிச்
சிரித்தினிக் களித்திடுமோ
வெறிச்சோடிக் கிடக்குதெங்கள்
இல்லமும் இதயங்களும்
விழிசிந்தும் கண்ணீரிலே
நீங்கள்தான் இருக்கிறீர்கள்.

மனைவி, பிள்ளைகள்;
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

66/12, அனுரா வீதி,
(5ஆம் ஒழுங்கை.)
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [37875]

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 – 09 – 1933
மறைவு: 17 – 07 – 1986

**திருமதி யோகம்மா சுப்பிரமணியம்**
(ஓய்வு பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியை)

திதி: 06 – 08 – 1995

அம்மா! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

கணவன், தாய், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

"யோக பவனம்",
மருதடி,
சாவகச்சேரி. [37823]

உதயன்
192/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பாசாங்கும் பசப்பும்

கடந்த மாதம் இரண்டாம் வாரத்தில் குடாநாட்டு மக்களை அவலப்படுத்தியது போலவே, இராணுவம் மீண்டும் சென்ற வெள்ளியன்றும் பெரும் அனர்த்தம் புரிந்தது.

ஒரு சிறு பகுதிக்கு முன்னேறிவந்து திரும்பிச் செல்லும் இராணுவத் தாக்குதலின் போது பல கிலோ மீற்றர் பரப்பில் உள்ள — மிகத் தூரத்தேயும் உள்ள — குடிமனைகள் மீது எறிகணைகளை ஏவியது. அதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பதற்றத்துடன் இடம்பெயர நேரிட்டது.

வெளிநாடுகளில் குடிமனைகள் இல்லாத எல்லைப் பகுதிகளில், காட்டுப் புறங்களில், மலைச் சாரல்களில் நடக்கும் போர்களின் போது, பீரங்கி மற்றும் கனரக டாங்கிகளில் இருந்து முழங்குவது போல, இராணுவத்தினர் வெள்ளியன்றும் முழங்கினர்.

தாம் ஆக்கிரமிக்க முயல்வது மக்கள் மிக நெருக்கமாகச் செறிந்து வாழும் பிரதேசம் என்பது இராணுவத்துக்குத் தெரியும். தமது எறிகணை, பீரங்கி, குண்டு வீச்சுத் தாக்குதல்களால் கொல்லப்படுவதும் பாதிக்கப்படுவதும் தமிழ்ப் பொது மக்களே என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

தமிழர்களைக் கொல்வதற்கென்றே நடத்தப்படும் இந்தப் போரினூடாகவே சந்திரிகா தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகவும், சமாதானத்தைவருவிக்கப் போவதாகவும் பறை தட்டுகிறார்!

உலகத்தை ஏமாற்றும் இந்தச் செயற்பாட்டின் ஓர் அங்கமாக, வடக்கு – கிழக்குப் போரில், தமிழ்மக்களை பாதுகாப்பதில் தமக்கு அக்கறை உண்டு என்று காட்டுவதற்காக ஆயுதப் படையினருக்குச் சில பணிப்புரைகளை அரசு விடுத்திருக்கிறது. அவற்றுக்குப் பெரும் பிரசாரமும் கொடுக்கப்படுகிறது.

★ ஏதுமறியாப் பொது மக்களின் நெஞ்சங்களையும் எண்ணங்களையும் அன்பாலும் மனித நேய நடவடிக்கையாலும் வெற்றி கொள்

★ உன்னைப் போலவே மற்றவர்களுக்கும் தாய், தந்தையர், சகோதர சகோதரிகள், பிள்ளை குட்டிகள் உள்ளனர் என்பதனை போர் நடவடிக்கையின் போது மனதில் பதியவை.

★ மனித இனத்தைச் சேர்ந்த சகலரினது உடலிலும் இனமத குல வேறுபாடின்றி ஒரே சிவப்பு நிற இரத்தமே ஓடுகிறது என்பதனை நினைவில் வைத்துக்கொள்.

★ நாட்டிற்காகப் பெரும் பணியில் ஈடுபட்டுள்ள நீ, கள்ளன் என்ற பெயரைச் சம்பாதிக்காதே — என்பன அந்தப் பசப்பான பணிப்புரைகளில் சில.

இவற்றுக்கு நூற்றுக்கு நூறு எதிர்மாறாகவே ஸ்ரீலங்கா இராணுவம் நடந்து கொள்கிறது.

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவில் என்ற கோட்பாட்டுடன் செயற்படும் அரசுக்கு வாய்த்த உத்தமக் கிங்கரர்களே ஆயுதப் படையினர். அதனையே வடக்கு—கிழக்கில் அவர்கள் நடத்தும் அழிவுகள், அட்டூழியங்கள் பிரதிபலிக்கின்றன.

உண்மையாகத் துயில்கொள்பவனைத் தட்டி எழுப்பி விடலாம். நித்திரை செய்வதாகப் பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியுமா?

## மற்றொரு போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஓக. 6

கடந்த 4 ஆம் திகதி அளவெட்டிப் பகுதியிலிருந்து சுன்னாகம் நோக்கி முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்துடனான சமரில் விழுப்புண்ணேற்று நேற்று யாழ். மருத்துவமனையில் சிகிச்சையின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை செந்தமிழினி (சரவணன் தயாவதி, கிண்ணியடி, வாழைச்சேனை த. மு. ஓட்டுமடம், யாழ்ப்பாணம்) அவர்களின் வித்துடல் இன்று பிற்பகல் 3.00 மணியளவில் அவரது தற்காலிக வதிவிடத்திருந்து எடுத்துச் செல்லப்பட்டு, மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக ஐந்து சந்தி நீர்வேலி/சந்திரிகன்னர், மாவீரர் மண்டபத்தில் வைக்கப்பட்டு, அங்கு மாலை 4.00 மணிக்கு இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெறும்.

அங்கிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் வித்துடல் புனித விதை குழியில் விதைக்கப்படும். (இ)

## மகாபொல புலமைப் பரிசில் இங்கு வழங்க ஏற்பாடு

மகாபொல புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வைபவம் இம்மாதம் 12 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற இருந்தது தெரிந்ததே.

இந்த வைபவத்தை யாழ்ப்பாணத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கும்படி கொழும்பில் தற்போதுள்ள யாழ் அரசாங்க அதிபரிடம் மேலதிக அரசாங்க அதிபர் கோரியிருந்தார்.

கொழும்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு இதனை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு மூலம் யாழ். அரசாங்க அதிபர் தற்போது கொழும்பில் இருந்து அறிவித்துள்ளார். (இ)

## ஆசிரியையின் பணம், நகை கிளாலியில் திருட்டு!

தென்மராட்சி, ஓக. 6

கிளாலியூடாக வந்த ஆசிரியை ஒருவர் பஸ்ஸில் ஏறிய போது கைப்பையிலிருந்த 55ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் 22 ஆயிரத்து 600 ரூபா பணத்தையும் திருட்டுக் கொடுத்தார்.

கடந்த திங்கட்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்த இந்த ஆசிரியை பாடசாலை விடுமுறைக்காக வவுனியா புளியங்குளத்திலிருந்து இங்கு வந்த போதே இத்திருட்டு இடம்பெற்றது.

இது தொடர்பாக பளை காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரமும் கிளாலியில் பயணி ஒருவரிடம் 65 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-117)

# இம்மாதம் 17 ஆம் திகதியிலிருந்து சனியும் சூரியனும் நேர்கோட்டில்

## அரசுக்குச் சோதனையான காலம் இது

இலங்கை சுதந்திரம் பெற்ற திகதி 04 - 02 - 1948 காலை 7-30 மணி. இதன்படி ஒரு சுதந்திரக் குழந்தை பிறந்ததாகக் கணித்தால் கும்பலக்கினமும் விருட்சிக ராசியிலும் சுதந்திரம் கிடைத்துள்ளது. இவற்றை நோக்கும் போது லக்கினாதிபதி சனி 6ஆம் வீடான கடக ராசியில் பகைப் பெற்றிருக்க, அதை 12 ஆம் வீட்டிலுள்ள சூரியனும், 10 ஆம் வீட்டிலுள்ள குருவும் நோக்குவதால் சிங்களம் என்று சொல்லக்கூடிய ஸ்ரீலங்கா அரசு நிம்மதியாக அரசாட்சி செய்ய முடியாது.

ஆனாலும் சிங்கள மக்களுக்கு சகோதர ஸ்தானமாகிய 3 ஆம் வீட்டுக்கு மேடத்திற்கு அதிபதியான செவ்வாய் 7 இல் பகை பெற்றிருப்பதும் தமிழர் சிங்களவர் என்ற பாகுபாட்டைக் குறிக்கக்கூடியபலன்சுதந்திரம் பெற்றநாளிலிருந்தேதோன்றிவிட்ட பலனாகும்.

எனவே குறிப்பிட்ட 04 - 02 - 1948 இல் சுதந்திரமடைந்த ஜாதகப்படி சனிபகவான் தான் நின்ற வீட்டிற்கு அட்டமஸ்தானத்தில் கும்பராசியில் சஞ்சரித்திருப்பது கோசாரப்படி 4இல் சனியாகும். எனவே 10-02-1994 தொடக்கம் 10 - 08 - 1996 வரை சனிபகவான் இலங்கை அரசை நிம்மதியாக இருக்க விடமாட்டார். மற்றும் அரசியல் ரீதியாக தீர்வுகள் எதனையும் கொண்டு வருவதால் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர முடியாது. அரசு பல இன்னல்களை எதிர்நோக்க நேரிடும். இதனால் இக் காலப் பகுதியில் சந்திரிகா அரசு நிலைக்குமா என்பது சந்தேகமே!

தற்போதைய கிரகநிலைப் படி 13-05-95 தொடக்கம் 11-07-95 வரை கும்பத்திலுள்ள சனியை சிங்கத்திலிருந்து செவ்வாய் நோக்கிய படியால் சிங்களவர்(ஸ்ரீலங்கா அரசு) — தமிழர் என்ற அடிப்படையில் யுத்தம் செய்து அதனால் இருபாலரும் பாதிக்கப்பட்ட நிலையை காணக்கூடியதாக உள்ளது.

ஆனாலும் இதேபோல 17-08-95 தொடக்கம் 17 - 09 - 95 வரையும் சனி, சூரியன் ஒரே நேர்கோட்டில் சஞ்சரிப்பார்கள் இக் காலம் எரியும் காலம் என்று சொல்லப்படக்கூடிய ஒன்றாகும். எனவே அப்போது சிங்கள அரசு கதிகலங்கும்; பெரும் அரசியல்தலைவர்களின் தலைகள் உருளும்; பொதுவாக ஸ்ரீலங்காஅரசு தலைகுனியும்.


மேலும் 16-09-1995 இன் மேல் ஓரளவு நற்பலனாக இருந்தாலும் 02-12-95 மேல் குருமாற்றம் ஓரளவு சமாதான சூழ்நிலையைத் தந்தாலும் 10-08-96 இன் மேல்தான் பூரணமான நிம்மதி அடைய சனிபகவான் பலன் செய்வார்.

பிரிதிவி, அப்பு, தேயு,வாயு ஆகாயம் என்ற ஐம்பெரும் பூதங்களுக்கும் அதிபதியாக வியாழன், வெள்ளி, செவ்வாய், புதன், சனி என்ற கிரகங்களே பொறுப்பானவர்களாக இருந்தாலும், எல்லா வகை சப்தமும் சனிக்குள் அடங்கும்.


எனவே 48ஆம் ஆண்டு சனி இருந்த நிலையில் தற்போது அட்டமத்திலிருந்து விலக வேண்டும் என்பது சோதிட உண்மையாகும். ★

- சங்கானை சண்முகரத்தினம் -

04–02–1948 கிரக நிலை காலை 7-30




தற்போதைய கிரக நிலை




## கூட்டுறவுச் சபை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 6

எதிர்வரும் புதன்கிழமை நடைபெற உள்ள ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை 7 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையினரால் நடத்தப்பட உள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. தா. கந்தசாமி தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெறும்.

சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், அல்லது செயலாளர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. [இ]

## நாட்டுப் பற்றாளர் புலிமாமா சாவு

யாழ்ப்பாணம், ஓக. 6

நாட்டுப்பற்றாளரான நாவேந்தன் [புலிமாமா]சுகவீனம் காரணமாக நேற்று சாவடைந்தார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். [இ]

## பயிற்சிநெறி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஓக. 6

சைவசித்தாந்த நோக்கிலான ஒழுக்கங்களும் அனுசரணைகளும் என்ற தொடரில் நல்லை ஆதீனத்தில் மு. ப 9 மணி முதல் 12 மணிவரை பயிற்சிநெறி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இன்று பண்டிதர் மு. கந்தையா "சைவ சித்தாந்தம்" எனும் பொருளில் பேருரை நிகழ்த்துவார். [அ-30]

## கிட்டு பூங்கா இரவு 11 மணிவரை

யாழ்ப்பாணம் ஓக. 6

நல்லைக் கந்தன் திருவிழாவை முன்னிட்டு கேணல் கிட்டு சிறுவர் பூங்கா தினமும் முற்பகல் 10 மணி தொடக்கம் இரவு 11 மணிவரை திறக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வைக்கோலுடன் வண்டில் எரிந்து நாசம்

நாவற்குழி ஓக. 6

வீதியோரத்தில் வைக்கோலுடன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வண்டில் தீப்பற்றி எரிந்து நாசமானது.

மறவன்புலோ கோயிலாக்கண்டிச்சந்தியின் அண்மையில் இரவு வேளையில்— இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வைக்கோலுடன் வண்டியை நிறுத்திவிட்டு, மாட்டை அவிட்டுச் சென்ற பின்னரே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரூபா நாற்பதாயிரம் பெறுமதியான வண்டிலும் ஐயாயிரம் ரூபா பெறுமதிமிக்க வைக்கோலும் முற்றாக எரிந்து நாசமாகின. (ஓ)

## அசம்பாவிதம் இல்லையாம்

யாழ்ப்பாணம், ஓக. 6

இராணுவத்தினர் வலிகாமம் வடக்கில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட அகோர ஷெல் தாக்குதலின் மத்தியிலும்

மானிப்பாய் இந்துக்கல்லூரி பரீட்சை மண்டபத்தில் மாணவர்கள் பதற்றம் அடையாமல் பரீட்சையை எழுதி முடித்தார்கள் என்றும் —

அங்கு எவ்வித அசம்பாவிதமும் நடைபெறவில்லை என்றும் — சண்டிலிப்பாய் கோட்டத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவிக்கிறார். [அ]

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா தர்மசேனன்
### [புலிமாமா]

மாதியப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா தர்மசேனன் (புலிமாமா) நேற்று (5-8-95) காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா - அளகம்மா அவர்களின் புதல்வரும், கனகசுந்தரம் (கொழும்பு) ஞானசுந்தரம் (சாவகச்சேரி), இராசலிங்கம் (கிளிநொச்சி), நரேந்திரன் (மயூரன் அரிசி ஆலை, கிளிநொச்சி), குணசேகரம் [லண்டன்], குலசேகரம் [சவூதி], சிவசண்முகநாதன் [கொக்குவில்], குமரகுருபரன் (கொழும்பு], விசயலட்சுமி [கனடா], தனலட்சுமி பாக்கியலட்சுமி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்
திருமதி பா. ஜெயராமச்சந்திரன்
(சகோதரி)

தொடர்பு:
அரசியல் துறை,
யாழ். மாவட்டசெயலகம்
கோண்டாவில். (37889)

## அப்புத்துரை கிருஸ்ணபிள்ளை

காரைநகர் கருங்காலியை வசிப்பிடமாகவும், தற்போது உயரப்புலம் ஆனைக்கோட்டையில் வசித்து வந்தவருமான அப்புத்துரை கிருஸ்ணபிள்ளை 3-8-95 வியாழக்கிழமை காலமானார்.

இவர் போகாம்பிகையின் அன்புக் கணவரும், ரவீந்திரன் (லண்டன்), பவானி (லண்டன்), குலேந்திரன் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவசிதம்பரம் (லண்டன்), சிவபவானி (லண்டன்), ஜீவா (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேந்திரன், சுரேக்கா, சுஜாத்தா, சுகன்யா ஆகியோரின் அன்புப் பேரனும், பிரபல வர்த்தகர் மு சிதம்பரப்பிள்ளை (நொச்சிகாமம்), ந. கணேசமூர்த்தி (பசறை), வடிவேல் (கிளிநொச்சி) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (6 - 8 - 95) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
போகாம்பிகை
(மனைவி)
(37890)

## சின்னையா - சின்னத்துரை
### (பிரபல வர்த்தகர் - கிளிநொச்சி)

சங்குவேலி ''ஜெயகிரி'' இல்லத்தைச் சேர்ந்த சின்னையா - சின்னத்துரை [பிரபல வர்த்தகரும், கிளிநொச்சி ''குமரன் ஸ்ரோஸ்' உரிமையாளரும்] நேற்று மாலை சங்குவேலியில் காலமானார்.

இவர் அன்னத்தின் அன்புக் கணவரும், ஜீவமலர், ஜெயமலர், சிவதாசன் (கிளிநொச்சி], சுகந்தமலர் [லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வரதராசலிங்கம் (பொறியியலாளர், லங்கா சிமெந் லிமிட்டெட்], சண்முகநாதன் [ஜேர்மனி], தயாறூபி, கமலநாதன் (லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜீவறோசா, வருஜிகா, வருஜன், ஜெறூசி, சாருஜன், சிருதன், சுவேதா (லண்டன்], நிசாந்தன் (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜீவமலர்
[மகள்]

''ஜெயகிரி'',
சங்குவேலி,
மானிப்பாய். [37888)

## ஆறுமுகம் வேலுப்பிள்ளை
### (புள்ளி அப்பு)

தொட்டிலடி சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் வேலுப்பிள்ளை நேற்று மாலை காலமானார்.

இவர் ஆறுமுகம் இலட்சுமி தம்பதிகளின் புதல்வனும், நாகலிங்கம், நடேசு, சரவணமுத்து, மார்க்கண்டு, தம்பையா, சிவக்கொழுந்து ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [6-8-95] காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந பாக்கியலட்சுமி
[மருமகள்]

தொட்டிலடி,
சங்கானை. (37891)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# இடம் பெயர்ந்தோருக்கு காசுக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக. 6

இடம்பெயர்ந்தோருக்கு நாளை 7 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு ஒருதொகைப் பணம் பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் வழங்கப்பட உள்ளது

பின்வருவோர் அடையாள ஆவணங்களுடன் வருகை தந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

பணம் பெறும் இடம் பெயர்ந்தோர் விவரம் வருமாறு :-

1. கிருஸ்ணவேணி இரத்தினராஜசிங்கம் அல்லது லட்சுமி சீனியர் (கந்தரோடை வீதி, சுன்னாகம்)

2. சிவசம்பு ராஜலிங்கம் (ரயில்வே வீதி, சுன்னாகம்)

3 கே சந்தையா (பழைய பொலீஸ் நிலையம், சுன்னாகம்]

4 புவனேஸ்வரி சிவசிதம்பரம் [சிவகுமார் வீதி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்)

5 பொன்னம்மா தங்கராசா [கோட்டைக்காடு, ஏழாலை மேற்கு, சுன்னாகம்]

6 இளையதம்பி கதிர்காமலிங்கம் "ஞானபதி" நீதிமன்ற வீதி மல்லாகம்]

7. மகாதேவன் [வட்டு மேற்கு வட்டுக்கோட்டை — யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பக்கத்தில்]

8. தெய்வராணி துரையப்பா [சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்)

## இறந்தோர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

இச்சண்டையில் உயர் அதிகாரி ஒருவர் உட்பட நான்கு படையினர் கொல்லப்பட்டதாகவும் 22 பேர் காயமடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு முன்னதாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது (இ-4)

## இலங்கையிடம் நஷ்ட ஈடுபெற கோரிக்கை

சென்னை, ஒக. 6

நாகபட்டினத்துக்கு அருகே இலங்கை ஹெலிக்கொப்டர் நடத்திய தாக்குதலில் 5 இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டதற்கு இலங்கையிடம் நஷ்ட ஈடு பெற்றுத்தர வேண்டும் என்று எம்.ஜி.ஆர். அ.தி.மு.கழகத் தலைவர் திரு.எஸ். திருநாவுக்கரசு மத்திய அரசைக் கோரி உள்ளார். (இ-எ)

## தீர்வை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுத் தேர்தல் நடத்துவது சம்பந்தமான திட்டத்தின் விவரத்தை இப்போதைக்குத் தெரிவிக்க ஜனாதிபதி விரும்பவில்லை என்றும்—

உரிய நேரத்தில் அது குறித்து பதிலளிப்பதாகவும்— ஜனாதிபதி கூறியதாக ''ராவய'' மேலும் தெரிவிக்கிறது.

இதே வேளை —

தமது அரசின் யோசனைகளை அடிப்படையாகக் கொண்ட தீர்வு ஒன்றை அமுல் செய்து, போரை முடிவுக்குக் கொண்டுவர முடியாவிடில் பொதுத் தேர்தலை நடத்தத் தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி நேற்றுக் கூறினார் என்று — வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது

சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பதவிக்கு வந்தது. அது பதவிக்கு வந்து இம்மாதம் 16 ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது.

நாடாளுமன்றின் பதவிக்காலம் ஆறு வருடங்களாகும்

கடந்த நவம்பரில் நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகாவின் ஆட்சிக் காலமும் ஆறு வருடங்களேயாகும் அவர் எதிர்வரும் 2,000 ஆம் வருடம் வரை வேண்டுமானால் பதவியில் இருக்கலாம் [அ-6-4]

## வலி. வடக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆகிய போராளிகள் நேற்று முன்தினமும் —

இச்சம்பவத்தில் விழுப்புண் அடைந்திருந்த வீரவேங்கை செந்தமிழினி [சரவணன் தயாபதி — வாழைச்சேனை) என்ற போராளி நேற்றும் வீரச்சாவடைந்தனர். [இ-4)


## குண்டுகளுக்கு உயிர்காக்க வீட்டிற்கொரு வழிகாட்டி




போர் விமானக் குண்டுகளும்
பீரங்கி எறிகணைகளும்
கனரக 'ஆட்லறி' ஷெல்களும்
முற்றத்திலும், முகட்டிலும் வெடிக்கும்

இன்றைய குடாநாட்டு வாழ்வில் —
ஒவ்வொருவருமே படிக்கவேண்டிய
உயிர் காக்கும் கையேடு

விலை ரூபா 25

தமிழீழ விடுதலைப் புலிகளின்
வெளியீட்டுப் பிரிவு

[37886]


# மரண அறிவித்தல்

## குமாரசாமி நடராசா

சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த குமாரசாமி நடராசா நேற்று மாலை காலமானார்.

இவர் சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், முத்துக்குமாரசாமி (உரிமையாளர், சக்தி அரிசி ஆலை, நீர்வேலி], சத்தியலோகநாயகி மயில்வாகனம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடேஸ்வரி முத்துக்குமாரசாமி, பூ நத்தம்பி மயில்வாகனம் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும், குமரேசன், சரவணன், விக்னேஸ், முருகதாஸ் ஆகியோரின் நேசமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காளையன்புலம் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ந முத்துக்குமாரசாமி
[மகன்]
37892)